வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 12.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாளை முதல் 7 நாள் அரசு முறைப் பயணமாக அல்ஜீரியா, மொரீட்டானியா உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளுக்கு செல்கிறார்.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் 2 ஆயிரத்து 236 கோடி ரூபாய் மதிப்பிலான 75 உள்கட்டமைப்பு திட்டங்களை காணொளி மூலம் இன்று தொடக்கி வைத்தார்.

பிரதமரின் தொழிற் பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்கள் நாட்டின் முன்னணி நிறுவனங்களில் பயிற்சி பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

விஜயதசமி திருநாளை முன்னிட்டு புதுச்சேரியில் உள்ள பல்வேறு கோவில்களில் வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாளை முதல் அக்டோபர் 19-ஆம் தேதி வரை அல்ஜீரியா, மொரீட்டானியா மற்றும் மாலவி ஆகிய நாடுகளுக்கு 7 நாள் பயணம் மேற்கொள்கிறார். முதல் கட்டமாக வரும் 15-ஆம் தேதி அல்ஜீரியா அதிபர் திரு அப்தல் மஜீதை சந்திக்கும் அவர் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்கிறார். தொடர்ந்து, இந்தியா-அல்ஜீரியா கூட்டமைப்பில் உரையாற்றும் அவர் பின்னர் அறிவியல் தொழில் நுட்ப பல்கலைக் கழகம் ஒன்றிலும் உரையாற்றுகிறார். ஆப்பிரிக்க நாடுகளுடனான இந்தியாவின் கூட்டாண்மை நம் சொந்த வளர்ச்சிக்கும் தெற்குலக வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆப்பிரிக்க நாடுகளுக்கு குடியரசு தலைவர் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். இந்தியாவின் ஜி-20 தலைமைத் துவத்தில் ஆப்பிரிக்காவிற்கு நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கிடைத்த நிலையில் குடியரசு

தலைவரின் இந்த பயணம் முக்கியத் துவம் பெறுகிறது. இப்பயணத்தின் போது புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் அவர் உரையாட உள்ளார்.

*விஜயதசமி*

இன்று விஜயதசமி திருநாள் கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அன்னை துர்கா தேவி மற்றும் பகவான் ஸ்ரீராமரின் ஆசீர்வாதத்துடன் மக்கள் அனைவரும் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் வெற்றி பெற வாழ்த்துவதாக பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார்.

*ராஜ்நாத் சிங்*

தசரா பண்டிகையை முன்னிட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மேற்கு வங்கத்தில் உள்ள சுக்னா ராணுவ தளத்தில் பாரம்பரிய பூஜைகளை தொடங்கி பங்கேற்றார். அதிநவீன காலாட்படை, பீரங்கி அமைப்பு, தகவல் தொடர்பு அமைப்புகள். டிரோன்கள், உள்ளிட்ட நவீன ராணுவ உபகரணங்களுக்கும் பூஜை நடைபெற்ற பின் ராணுவ வீரர்களிடையே உரையாற்றினார். எல்லைகளில் அமைதி, நிலைத் தன்மையை பராமரிப்பதில் ஆயுதப் படைகளின் முக்கிய பங்கையும், ஆயத்த நிலைகளையும் அவர் பாராட்டினார்.

இந்தியா எந்த நாட்டையும் வெறுப்பினாலோ, அவமதிப்பினாலோ தாக்கியது இல்லை என்று கூறிய அமைச்சர் நமது இறையாண்மைக்கு யாராவது பங்கம் விளைவிக்கும் போது மட்டுமே நாம் பதிலடி கொடுக்கிறோம் என்று தெரிவித்தார்.

மேலும், நமது தேச நலனுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் பெரிய முடிவுகளை எடுக்கவும் இந்தியா தயங்காது என்றும் கூறினார். தசரா பண்டிகை தீமைக்கு எதிராக நன்மையின் வெற்றியைக் குறிக்கிறது என்று திரு ராஜ்நாத் சிங் தமது உரையின் போது கூறினார். இந்நிகழ்ச்சியில் ராணுவ தலைமை தளபதி திரு உபேந்திர திவேதி, உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். நாட்டின் எல்லைச் சாலை அமைப்பின் மூலம் 2 ஆயிரத்து 236 கோடி ரூபாய் மதிப்பிலான 75 உள்கட்டமைப்பு திட்டங்களை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் காணொளி மூலம் இன்று தொடக்கி வைத்தார். சிக்கிம், நாகாலாந்து, அந்தமான்-நிக்கோபார் உள்ளிட்ட 11 எல்லை மாநிலங்கள் மற்றும் யூனியன்

பிரதேசங்களில் 22 சாலைகள் 51 பாலங்கள், மற்றும் ராணுவ போக்குவரத்துக்கான பிரத்யேக வழித் தடங்களும் இதில் அடங்கும். நிகழ்ச்சியில் பேசிய அவர் மத்திய அரசு வடகிழக்கு மற்றும் எல்லை மாநிலங்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

*பிரதமர்-தொழிற் பயிற்சி*

பிரதமரின் தொழிற் பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்கள் நாட்டின் முன்னணி நிறுவனங்களில் பயிற்சி பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது. எண்ணெய், இயற்கை எரிவாயு, எரிசக்தி, போக்குவரத்து, கனரக வாகனங்கள், நிதி சேவைகள் உள்ளிட்ட 24 துறைகளில் இப்பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

முதற்கட்டமாக 36 மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களின் 737 மாவட்டங்களில் அந்தந்த பகுதி இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. 21 வயது முதல் 24 வயதிற்கு உட்பட்ட 91 ஆயிரம் இளைஞர்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையுடன் தொழில் பழகுநர் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதற்கு விண்ணப்பிக் வரும் 25-ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் ஒரு கோடி இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்க 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*வருமான வரித் துறை*

வருமான வரித் துறை 2024-25-ஆம் நிதியாண்டில் இதுவரை நேரடி வரியாக 13 லட்சத்து 57 ஆயிரம் கோடி ரூபாய் வசூல் செய்துள்ளது. இதில் 7 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தனி நபர் வருமானவரியும், 6 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான கார்ப்பரேட் வரியும் அடங்கும். இத்துறை நேற்று வரை 2 லட்சத்து 31 ஆயிரம் கோடி ரூபாயை ரீபண்ட் தொகையாக வரி செலுத்துவோருக்கு வழங்கி உள்ளது.

*முருகன்*

இந்தியாவில் புல்லட் ரயில் சேவை அடுத்த ஆண்டு தொடங்கப்படும் என மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். சிவகங்கையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் அனைத்து துறைகளும் சிறப்பான, வேகமான வளர்ச்சி அடைந்துள்ளதாக கூறினார். வரும் 2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சி

அடைந்த இந்தியாவை உருவாக்க மக்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். மைசூர் தர்பங்கா ரயில் விபத்து குறித்து உயர் மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். முன்னதாக சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலியின் நினைவு நாளை ஒட்டி சிவகங்கையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அமைச்சர் அன்னாரது சுதந்திர போராட்ட அர்ப்பணிப்பை நினைவு கூறும் வகையில் சிறப்பு தபால் தலை விரைவில் வெளியிடப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

*அரியானா*

சமீபத்தில் அரியானாவில் நடந்து முடிந்த சட்டப் பேரவை தேர்தலில் வெற்றி பெற்ற பாஜக தொடர்ந்து 3-ஆவது முறையாக வரும் 17-ஆம் தேதி வியாழக்கிழமை பதவி ஏற்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் பிஜேபி மூத்த தலைவர்கள் பதவி ஏற்பு விழாவில் பங்கேற்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*குரங்கம்மை*

ஆப்பிரிக்காவில் குரங்கம்மை நோய் தொற்றுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்கும் நிலையில் மேலும் 7 ஆயிரம் பேருக்கு நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இந்நோய் 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை அதிகம் பாதிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*விமானம்*

திருச்சியில் இருந்து 141 பயணிகளுடன் நேற்று மாலை ஷார்ஜா புறப்பட்ட ஏர்-இந்தியா விமானம் தொழில் நுட்ப கோளாறு காரணமாக மீண்டும் திருச்சி விமான நிலையத்தில் பத்திரமாக தரை இறக்கப்பட்டது. விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளும் தரை இறக்கப்பட்டு மாற்று விமானம் மூலம் நள்ளிரவு 2 மணி அளவில் ஷார்ஜாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதுகுறித்து மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை தலைமை இயக்குநரகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

*காரைக்கால்-ஆய்வுக் கூட்டம்*

வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை மூலம் ஏற்படும் அனைத்து விதமான பேரிடர்களையும், சமாளிக்கும் வகையில் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த மறு ஆய்வுக் கூட்டம் வரும் 14-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு காரைக்கால், திருநகர் சமுதாயக் கூடத்தில் நடைபெற உள்ளது. குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு திருமுருகன் தலைமையில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

*சுப்பையா*

மறைந்த மக்கள் தலைவர் வ.சுப்பையாவின் நினைவு தினம் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி நெல்லித்தோப்பு சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமிநாராயணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் J.சரவணன் குமார், சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. ராஜவேலு, எதிர்க்கட்சித் தலைவர் திரு. சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ரமேஷ், திரு. சம்பத், திரு. செந்தில்குமார் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*புதுச்சேரி-பட்டாசு*

தீபாவளிக்காக ஆன்-லைனில் பட்டாசு ஆர்டர் செய்து பணத்தை இழக்க வேண்டாம் என புதுச்சேரி **சைபர் கிரைம் போலீசார்** பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஆண்டு புதுச்சேரியில் இதுபோல ஆர்டர் செய்த 78 பேர், இணையவழி மோசடி நபர்களால் ஏமாற்றப் பட்டதாகவும், இவ்வாண்டு 3 நாட்களில் மட்டும் இத்தகைய 2 புகார்கள் பெறப்பட்டு, 45 ஆயிரம் ரூபாய் **பண இழப்பு** கண்டறியப் பட்டுள்ளதாகவும், **சைபர் கிரைம் போலிசார்** தெரிவித்துள்ளனர்.

*புதுச்சேரி-விஜயதசமி*

விஜயதசமி திருநாள் குழந்தைகளுக்கு முதல் முறையாக கல்வியைத் தொடங்கும் நாளாகவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக

புதுச்சேரியில் உள்ள பல்வேறு கோவில்களில் வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. முத்தியால்பேட்டையில் உள்ள ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்கிரீவர் கோவிலில் திரளான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு நெல்லில் எழுதி முதல் கல்வியை தொடங்கி வைத்தனர்.

*வானிலை*

தென்மேற்கு வங்க கடலில் நாளை மறுநாள் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது புயலாக வலுவடைந்து தமிழக கடல் பகுதியில் வரும் செவ்வாய்கிழமை கரையைக் கடக்க கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே தென் தமிழகம் மற்றும் தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தஞ்சாவூர், திருவாருர், நாகப் பட்டிணம், மயிலாடுதுறை, அரியலூர், பெரம்பலூர், கோவை, நீலகிரி உள்ளிட்ட தமிழகத்தின் சில மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கிரிக்கெட்*

இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3-ஆவது மற்றும் கடைசி 20-20 கிரிக்கெட் போட்டி ஐதராபாத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெற உள்ளது. முன்னதாக நடைபெற்ற இரு போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்று 2-க்கு பூஜ்யம் என்ற புள்ளி கணக்கில் தொடரை கைப்பற்றி உள்ளது. நியுசிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேசுக்கு எதிரான தொடரில் விளையாடி வரும் இந்திய அணியில் இடம் பெற்றுள்ள யாஷ் தயாளை தவிர்த்து மற்ற அனைவரும் இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர்.

*மகளிர் கிரிக்கெட்*

ஐசிசி உலகப் கோப்பை மகளிர் 20-ஓவர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா நாளை ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

*டேபிள் டென்னீஸ்*

ஆசிய டேபிள் டென்னீஸ் சாம்பியன் ஷிப் போட்டியின் மகளிர் இரட்டையர் அரை இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் ஐஹிகா முகர்ஜி-சுகிதா முகர்ஜி இணை முன்னேறி உள்ளது. இன்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் தென்கொரிய

இணையை 3-க்கு 1 என்ற செட்களில் முகர்ஜி இணை வென்று நாளை நடைபெற உள்ள அரை இறுதி ஆட்டத்தில் ஜப்பான் இணையை எதிர்கொள்ளும்.

கிஷன் ரெட்டி

பிரதமரின் சூரியசக்தி திட்டத்தின் கீழ், ஐதராபாத் இந்திய புவியியல் ஆய்வு பயிற்சி நிறுவனத்தில் மேற்கூரை சூரிய சக்தி திட்டத்தை மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி இன்று தொடக்கி வைத்தார். சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் பசுமை முயற்சிகளின் ஒரு பகுதியாக மரக் கன்றுகளும் நடப்பட்டன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாளை முதல் 7 நாள் அரசு முறைப் பயணமாக அல்ஜீரியா, மொரீட்டானியா உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளுக்கு செல்கிறார்.

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் 2 ஆயிரத்து 236 கோடி ரூபாய் மதிப்பிலான 75 உள்கட்டமைப்பு திட்டங்களை காணொளி மூலம் இன்று தொடக்கி வைத்தார்.

பிரதமரின் தொழிற் பயிற்சி திட்டத்தின் கீழ் இளைஞர்கள் நாட்டின் முன்னணி நிறுவனங்களில் பயிற்சி பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

விஜயதசமி திருநாளை முன்னிட்டு புதுச்சேரியில் உள்ள பல்வேறு கோவில்களில் வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது.

-------------------------